முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.1.2024) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் சந்தித்து, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (சிட்கோ) 2022-23ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத் தொகையான 8 கோடியே 94 இலட்சத்து 69 ஆயிரத்து 897 ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சிட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி எஸ். மதுமதி,., ஆகியோர் உடனிருந்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.1.2024) தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் சந்தித்து, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் (எல்காட்) 2022-23ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத் தொகையான 7 கோடியே 77 இலட்சத்து 91 ஆயிரத்து 500 ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், தமிழ்நாடு மின்னணு நிறுவன மேலாண்மை இயக்குநர் மரு.எஸ். அனீஷ் சேகர், செயல் இயக்குநர் ச. அருண்ராஜ், ஆகியோர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.1.2024) தலைமைச் செயலகத்தில், உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி நீதியரசர் இப்ரஹிம் கலிஃபுல்லா, தில்லி உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி நீதியரசர் டி. முருகேசன் ஆகியோர் சந்தித்து, சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர்கள் சார்பில் மிக்ஜாம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் பெய்த அதி கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 12 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

திருக்கோயில்களில் எந்த ஒரு சிறு தவறுக்கும் இந்த ஆட்சி இடம் தராது!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு உறுதி!

சென்னை, ஜன.23-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (22.01.2024) குடமுழுக்கு நடைபெற்ற சென்னை, கோட்டூர்புரம், அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலில் நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் இன்றைக்கு மட்டும் 5 வைணவத் திருக்கோயில்கள் உள்பட 20திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல் இன்று வரை 1,290 திருக்கோயில்களில் குடமுழுக்குகள் நடைபெற்றுள்ளன. மன்னர்களாலும், நம் முன்னோர்களாலும் கட்டப்பட்ட 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையான திருக்கோயில் களை பாதுகாத்து புனரமைத்திட முதலமைச்சர் அவர்கள் 2022-2023 மற்றும் 2023-2024

இறை சொத்து இறைவனுக்கே என்ற தாரக மந்திரத்தோடு ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் முழுவதுமாக மீட்கப்பட்டு வருகின்றன. இதுவரை ரூ. 5,558 கோடி மதிப்பீட்டிலான 6,701 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. திருக்கோயில்களுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கிடும் வகையில் 756 திருக்கோயில்களில் ஒருவேளை அன்னதானம் நடைபெற்று வருகிறது. இந்தாண்டு கூடுதலாக 7 திருக்கோயில்கள் இணைக்கப்பட உள்ளன. நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் 2 திருக்கோயில்களில் தான் செயல்பாட்டில் இருந்தது. தற்போது அதனை 8 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தியதோடு, இன்றைய தினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பெரியபாளையம், பவானி அம்மன் திருக்கோயில், மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோயில், ஆனைமலை மாசாணி அம்மன் திருக்கோயில் ஆகிய 3 திருக்கோயில்களுக்கும் நாள் முழுவதும் அன்னதானத் திட்டம் தொடங்கி வைக்கப்பட உள்ளது.

ஆளுநர் ரவி அவர்கள் இன்று காலை சென்ற திருக்கோயிலில் அவருக்குண்டான அனைத்து வரவேற்புகளோடு சிகப்பு கம்பளம் விரித்து சிறந்த முறையில் தரிசனம் செய்து வைக்கப்பட்டுள்ளது. ஆளுநர் அவர்கள் கூறியது போல் இந்த ஆட்சியைப் பொறுத்தளவில் எந்த விதமான அச்சுறுத்தலும் யாருக்கும் கிடையாது. என் அருகில் அமர்ந்திருப்பவர் ஒரு பட்டர் தான். அப்படி அச்சுறுத்தல் இருந்தால் இப்படி பக்கத்திலே அமருவாரா? அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பார்கள், காமாலை கண்டவருக்கு கண்டதெல்லாம் மஞ்சள் என்பது போல, ஆளுநருக்கு யாரைப் பார்த்தாலும் அப்படி தோன்றுகிறது போல் இருக்கிறது. ஆளுநர் வந்து சென்ற பிறகு பத்திரிகையாளர்களை சந்தித்த அந்த திருக்கோயிலின் பட்டர் மோகன், எங்களுக்கு எந்த விதமான அழுத்தமோ, அச்சுறுத்தலோ இல்லை, நாங்கள் சுதந்திரமாக இருக்கின்றோம் என்று தெளிவாக சொல்லி இருக்கின்றார்.

திருக்கோயில்களையும், திருக்கோயில் பணியாளர்களின் நலன்களையும் பாதுகாக்கின்ற அரசாக திராவிட மாடல் அரசு திகழ்கிறது. தைத்திருநாளை முன்னிட்டு அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 2 செட் புத்தாடைகள் மற்றும் சீருடைகள், ஓய்வுபெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு பொங்கல் கொடை, அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியம் ரூ.4,000/ மாக உயர்வு, ரூ.81 கோடி மதிப்பீட்டில் 6 இடங்களில் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்கள் குடியிருப்புகள் என பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி உள்ளோம். அதனால்தான் அர்ச்சகர்கள் எங்களுக்கு தோளோடு தோள் கொடுக்கின்ற நண்பர்களாகத்தான் இருக்கின்றார்கள். ஏதாவது ஒரு வகையில் ஆன்மிகத்திற்கு எதிராக இருப்பது போல் இந்த ஆட்சியை சித்தரிக்க வேண்டும் என்பதற்காக ஆளுநரும் பாரதிய ஜனதா கட்சியோடு கூட்டு சேர்ந்து இருக்கிறார் என்பதை நான் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன்.

அனைத்து திருக்கோயில்களும் சுதந்திரமான முறையில் செயல்படுகின்றன. ஒன்றிய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் அரசியல் கண்ணோட்டத்தோடு தான் இதனை அணுகுகிறார். நேற்றைய தினம் மதுராந்தகம், ஏரிகாத்த ராமர் திருக்கோயிலுக்கு சென்று இங்கு என்ன பணிகள் நடைபெறுகிறது என்று கேட்டிருக்கின்றார். உபயதாரரும் அந்த திருக்கோயில் செயல் அலுவலரும் ரூ.25 லட்ச ரூபாய் உபயதாரர் நிதியில் திருப்பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று விளக்கமாக சொல்லி இருக்கின்றார். அதன் பிறகு உபயதாரர் நிதியில் இந்த திருப்பணிகளை மேற்கொள்கிறீர்கள் என்றால் உண்டியலில் வருகின்ற காசை நீங்கள் எங்கே எடுத்துச் செல்கிறீர்கள் என்று கேட்டிருக்கின்றார். அடிப்படை கூட தெரியாமல் பேசுகின்றார்.

ஒரு திருக்கோயிலுக்கு உபயதாரர்கள் வருகின்றபோது அவர்களைப் பயன்படுத்தி தான் அந்த திருக்கோயிலில் திருப்பணிகளை செய்வார்கள். சிலர் ஏதாவது நேர்த்திக்கடன் வேண்டி அது நிறைவேறி இருந்தால் திருப்பணிகளை மேற்கொள்வார்கள். அப்படிச் செய்கின்றவர்களை வேண்டாம் என்று தள்ளி வைத்துவிட்டு திருக்கோயில் வருமானத்தில் எந்தக் காலத்திலும், சூழ்நிலையிலும் திருப்பணிகள் நடைபெறவில்லை. ஆகவே அவர் குற்ற நோக்கோடு ஒவ்வொரு சம்பவத்தையும் அணுகுகிறார். இன்றைக்கு கூட காஞ்சிபுரத்தில் காமாட்சி அம்மன் திருக்கோயிலில் ராம பஜனை பாடுகின்ற நிகழ்ச்சியில் அவர் பங்கேற்று இருக்கின்றார். அந்த ராமபஜனை நிகழ்ச்சிக்கும் இந்த அரசு அனுமதி அளித்திருக்கின்றது. அந்த திருக்கோயிலை மேற்பார்வை செய்யும் இந்து சமய அறநிலையத்துறையும் அதற்கு எந்த விதமான தடையும் விதிக்கவில்லை.

இன்றைக்கு கூட நீதிமன்றத்திலே வழக்கு விசாரணைக்கு வந்தபோது நீதிபதி அவர்கள் நல்ல நிலையில் நல்லதொரு அரசாக இந்து சமய அறநிலையத்துறையில் எந்த தடையும் இதற்கு விதிக்கவில்லை, தயவுசெய்து அவதூறுகளை பரப்ப வேண்டாம் என்று நீதிமன்றமே இன்றைக்கு எடுத்து கூறி இருக்கின்றது.

அயோத்தியில் ராமருக்கு பிரதிஷ்டை செய்கின்ற நிகழ்ச்சி நடைபெறும் போது மிக முக்கியமான பொறுப்பில் இருக்கின்ற நிதி அமைச்சர் அங்கு செல்லாமல் இங்கு இருக்கிறார் என்றால் அவர் ஆன்மிகமாக நடந்து கொள்ளவில்லை அரசியல் கலந்த ஆன்மிகத்தை செய்வதற்காகத்தான் அவர் தமிழகத்தில் முற்படுகின்றார். ஏதாவது ஒரு சூழ்நிலையில் ஆன்மிகத்துக்கு எதிரான ஆட்சி இந்த ஆட்சி என்பதை தொடர்ந்து கூறவேண்டும் என்பதற்காக இப்படி பொய் பிரச்சாரங்களை கூறிக் கொண்டிருக்கின்றார். இவ்வளவு உயரிய பொறுப்பிலே இருப்பவர் இவ்வளவு கீழே இறங்கி வந்து இப்படி எல்லாம் நடந்து கொள்வது வருத்தம் அளிக்கிறது. நீங்கள் எத்தனை குட்டிக்கரணங்கள் அடித்தாலும் என்னென்ன மாய்மாலங்களை செய்தாலும் இந்த ஆட்சி ஆன்மிகத்துக்கு எதிரான ஆட்சி என்று எவ்வளவு பொய் பரப்புரைகளை செய்தாலும் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தை அவர்கள் எதிர்பார்ப்பதற்கு மேலாக உயர்ந்த இடத்தில் வைப்பதற்கு தமிழக பக்தர்களும், ஆன்மிகவாதிகளும், தமிழ்நாட்டு மக்களும் தயாராக இருக்கின்றார்கள்.

அவதூறுகளைப் பற்றி இந்த ஆட்சியும் இந்து சமய அறநிலையத்துறையும் கவலைப்படுவதில்லை. நேற்றைக்குக் கூட அவதூறான செய்தியை வெளியிட்டவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்போம் என்று இந்து சமய அறநிலையத் துறை சார்பில் செய்தி வெளியிட்டு இருக்கின்றோம். அதே நேரத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் நிலைப்பாடு என்ன என்பதையும் நேற்றைக்கு தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்திருக்கின்றோம். இந்த துறையின் செயலாளர், சிறப்பு பணி அலுவலர் மற்றும் ஆணையர் ஆகியோர் இறைவன் மீது நம்பிக்கை கொண்டவர்கள். ஆகவே நிச்சயமாக எந்த ஒரு சிறு தவறுக்கும் கூட இந்த ஆட்சி இடம் தராது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் அதற்கு இடம் தர மாட்டார் என்பதை அழுத்தம் திருத்தமாக பதிவு செய்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, இந்து சமய அறநிலையத் துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், இணை ஆணையர்கள் பொ.ஜெயராமன், திருமதி கி.ரேணுகாதேவி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு வாழ்த்து! வே.வாசு தலைமை!

வில்லிவாக்கம் ஐ.சி.எப்.-எஸ்.துரைபாபு இல்ல மணவிழா வரவேற்பு!

தயாநிதி மாறன் எம்.பி. - அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, ஜன.23-

சென்னை கிழக்கு மாவட்டம் வில்லிவாக்கம் கிழக்குபகுதி மாவட்ட பிரதிநிதி ஐ.சி.எப்.எஸ்.துரைபாபு, திருமதி.டி.குமாரி ஆகியோரின் மூத்த மகள் டி.ரூபிகாவிற்கும், திருவல்லிக்கேணி ஜி.சேகர் திருமதி.எஸ்.ரோகிணி ஆகியோரின் இளையகுமாரன் எஸ்.மகேஷ்க்கும் நாளை (24.01.2024 புதன்கிழமை) காலை 6.00 மணிமுதல் 7.30 மணிக்குள் சென்னை 40, அண்ணாநகர் கிழக்கு, காந்திநகர் மருத்துவமனை எதிரில் அமைந்துள்ள திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெறுகிறது.

அதை முன்னிட்டு இன்று (23.01.2024 செவ்வாய்கிழமை) மாலை 6.30 மணியளவில் திருமண வரவேற்பு நடைபெறுகிறது.

வில்லிவாக்கம் கிழக்கு பகுதி செயலாளர் வே.வாசு தலைமையிலும், வில்லிவாக்கம் மேற்குபகுதி செயலாளர், கூ.பீ. ஜெயின், எம்.சி. கொளத்தூர் கிழக்குப்பகுதி செயலாளர் ஐ.சி.எப்.வ.முரளிதரன், டி.வி.செம்மொழி, எம்.சி. லதாவாசு, எம்.சி, எம்.சுரேஷ், டி.சம்பத், டி.தாமோரன், டபிள்யு. அமுது, நா.அறிவுடைநம்பி, ச.மனோகரன், விக்னேஷ் சீனிவாசன், எ. வேதா, கே.பாஸ்கர், சி. தேவராஜ், காஞ்சி. செ.துரை ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகின்றது.

வி.சபாபதி, மு.பரமானந்தம், ப.செந்தில்குமார், ந.குமார், எ.சத்தியநாராயணன், கி.ஜெய்சங்கர், வ.ரமேஷ்பாபு, டி.ஸ்டாலின், கே.ராஜா, வி.ஆர். ஜெயக்குமார் ஆகியோர்கள் வரவேற்புரையாற்றுகின்றனர்.

மணமக்களை இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகரவளர்ச்சி குழுமம் அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி, அ.வெற்றி அழகன், எம்.எல்.ஏ., மேயர் பிரியாராஜன், இரா.கிரிராஜன், எம்.பி., டாக்டர்.கலாநிதி வீராசாமி, எம்.பி., நே.சிற்றரசு, த.இளைய அருணா, ப.ரங்கநாதன், ப.தயாகம்கவி, எம்.எல்.எ.. ஜோசப் சாமுவேல், எம்.எல்.ஏ., எம்.கே.மோகன், எம்.எல்.ஏ., ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ., வே.கௌதமன். பி.கே. மூர்த்தி, எம்.சி., ச.பரமசிவம், செ.தமிழ்வேந்தன், இரா.கருணாநிதி, சாவித்திரி வீரராகவன். டி.லோகேஷ், வானவில் விஜய், சுதாதீனதயாளன், பரிதிஇளம்சுருதி, சி.மகேஷ்குமார், பி.ஜெய்சங்கர் ஆகியோர் வாழ்த்துகிறார்கள்.

மண விழாவுக்கு வருகை தருவோரை கே.ரமேஷ், ஐ.சி.எப். வ.முரளிதரன், டி.தமிழ்வாணன், தி.மு.க. ஐசி.எப். லேபர் யூனியன் நிர்வாகிகள் வரவேற்கின்றனர்.

மயிலை 124 (அ) வட்ட துணைச் செயலாளர்

வெ.சரண்ராஜ் இல்ல மணவிழா வரவேற்பு!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை! அமைச்சர்கள் வாழ்த்து!

சென்னை, ஜன.23

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்கு பகுதி 124அ வட்ட துணை செயலாளர் வெ.சரண்ராஜ், பகுதி துணை அமைப்பாளர்- மயிலை கிழக்கு மாணவர் அணி ஏ.கோகுலகிருஷ்ணன் இல்ல திருமண வரவேற்பு விழா இன்று நடைபெறுகின்றது.

சென்னை மந்தைவெளி கோ.ஏழுமலை ஏ.மோகன வள்ளி ஆகியோரின் புதல்வி.ஜெயலட்சுமி, மயிலாப்பூர் ரா.குமார் கு. லெசுட்மி ஆகியோரின் புதல்வர் கு.பிரேம்குமார், ஆகியோரின் மண விழா வரவேற்பு இன்று (23.01.2024 செவ்வாய்க்கிழமை), மாலை 6 மணியளவில் காமதேனு திருமண மண்டபம், மயிலாப்பூரில் நடைபெறுகிறது.

மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி முன்னிலை வகிக்கிறார்.

124 அ வட்ட பொறுப்பாளர் மா.பா.அன்பு, மூ. இராஜேந்திரன், ராஜா அன்பழகன், விமலா கிருஷ்ணமூர்த்தி, எஸ்.சரவணன், மூ.உதயசூரியன், த.விக்னேஸ்வரன், ஸ்டோன் வீ.அருண்குமார், மயிலை தா.தீபன் ஆகியோர் வரவேற்புரை வரவேற்றுப் பேசுகின்றனர்.

இதில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் - சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மா.சுப்பிரமணியன், பள்ளி கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்க பாண்டியன், மேயர் பிரியாராஜன், மு.மகேஷ்குமார், தியாகராயர் நகர் கிழக்கு பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி., இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ, மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி, தியாகராயர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை, மாநில துணைச் செயலாளர் மாணவர் அணி எஸ்.மோகன்

எஸ்.மோகன், நந்தனம் நம்பிராஜன், மு.தம்பிதுரை, சி.தசரதன், டாக்டர் ஜெ. அருண் டாக்டர் கலைகதிரவன், ஆ.சந்திரசேகர், நந்தனம் வேதா, மு.சத்யா, கே. மலர், என்.அன்பழகன் கோ.சு.மணி, செல்விசௌந்தரராஜன், மந்தைவெளி அ.பாபு, யோகேஷ்ரவி, வேலுசம்பந்தம் எம்.ஆறுமுகம், அ.வாசுதேவன், ஜெ. ஜானகிராமன், ஜி.டி.அம்பேத்கர், எஸ்.முனுசாமி, பி.எல்.தாஸ், ஏ.குமாரி, எல். உதயகுமார், ஜி.ஆர்.இராஜேந்திரன் ஆர்.எல்.வி. அசோக்குமார். பா.பாக்கியதாஸ், அகல்யாவிஸ்வநாதன், ஜி.முருகையன்மயிலை கிழக்கு/மேற்கு பகுதி வட்ட செயலாளர்கள் : ஏ.தாஸ், அ.தவநேசன், வி. வெற்றிவேல், கோ.கண்ணன், துரைபார்த்திபன், பா.பொன்னுசாமி டி.ராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, ராஜாசுரேஷ்குமார், அ.நாகராஜன், மு.இ.ஏழுமலை, அ.ரேவதி, கீதாமுரளி, ஆர். கே.சந்திரேஷ், தி.பாலாஜி, எம்.பி.மருதமுத்து, இ.சி. ஆர்.பாபு, எஸ்.பானுசலீம், என்.வடிவேல், விஜய்வெங்கடேசன், ஆர்.கதிரவன், மயிலை ஆர்.பானு மோனிஷா, சி.கணேஷ்பாண்டியன், ம.ஆனந்தன், புஜிபூர் டி.மோசஸ், ச.சண்முகநாதன் சாந்தோம் ஆ.அந்தோணி, ஜெ.ஜெகன்ராஜ், குமரன், ஏ.சத்தியமூர்த்தி, டாக்டர் கோ.சக்தி விக்னேஷ் என்.எஸ்.பால சுப்பிரமணி, இரா.சக்கரவர்த்தி, கே.வெங்கட்ராமன், பி.கே.ராஜேஷ்கண்ணா மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்துகின்றனர்.

ஆயிரம் விளக்கு -

மொழிப்போர்த் தியாகி வி.நடராஜன் படத்திறப்பு நிகழ்ச்சி!

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு பங்கேற்பு!

சென்னை, ஜன.23-

ஆயிரம் விளக்கு - மொழிப்போர் தியாகி வி.நடராஜன் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (23.1.2024) மாலை 6 மணிக்கு தியாகராயர் நகர் இராமகாமத் துபுரத்தில் நடைபெறுகின்றது.

அன்னாரின் திருவுருவப் படத்தை மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு திறந்து வைக்கிறார்.

இதில் டாக்டர் நா.எழிலன் எம்.எல்.ஏ., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., மா.பா. அன்புதுரை, கே.ஏழுமலை, கோ.சு. மணி, கோ.ரவி, மு.வெங்கடேசன், கே.மலர், திருமலை பொன்னுரங்கம், பிரேமா சுரேஷ், டி.தேவராஜ், பி. ஜெயக்குமார், பி.மாரி, எம். எம்.விஷ்ணு, எல்.தவமணி, கே.எஸ்.வெல்டிங் ராஜா, ந. மோ.முரளி, தட்சன் அரிகரன், மு.செல்வகுமார், எஸ்.எம்.கே. அண்ணாதுரை, பாட்ஷா பாபு மற்றும் பலர் கலந்துகொள்கின்றனர்.

மெடிக்கல் சி.மோகன் நன்றி கூறுகிறார்.

நேற்று (22.01.2024) சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் சார்பில் சங்கம்பீடியா வலைப்பக்கத்தினை தொடங்கி வைத்து சங்கச் செம்மல் விருது வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள், பேராசிரியர் ப.பாண்டியராஜா, தமிழ் மரபு அறக்கட்டளை தலைவர் முனைவர் க.சுபாஷினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை மாவட்டத்தில் அடங்கியுள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான

ஒருங்கிணைந்த இறுதி வாக்காளர் பட்டியல்!

மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் வெளியிட்டார்!

சென்னை, ஜன 23-

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை மாவட்டத்தில் அடங்கியுள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான ஒருங்கிணைந்த இறுதி வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், நேற்று (22.01.2024) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் வெளியிட்டார்.

அத்துணைப் பட்டியல்கள் உடனான ஒருங்கிணைந்த இறுதி வாக்காளர் பட்டியல் நேற்று (22.01.2024) வெளியிடப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியல்கள் சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, உதவி ஆணையாளர் அலுவலகங்களிலும், வாக்குச்சாவடி மையங்களிலும் பொது மக்கள் பார்வையிடலாம். மேலும், www.elections.tn.gov.in என்ற இணையதள முகவரியிலும் பார்த்து கொள்ளலாம்.

கடந்த 27.10.2023 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் சென்னை மாவட்டத்தினைச் சார்ந்த 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான மொத்த வாக்காளர்களது எண்ணிக்கை விவரம்

1. ஆண்கள்-19,01,911, 2. பெண்கள்-19,65,149, 3. இதரர் -1,118, மொத்தம் 38,68,178

2024ஆம் ஆண்டு சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் தொடர்பாக 69,079 பெயர் சேர்த்தல் மனுக்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டது. அதன் விவரம் கீழ் வருமாறு :

1. ஆண்கள் - 32,774, 2.பெண்கள் - 36,255, 3. இதரர் -50, மொத்தம் 69,079

மேற்படி பெறப்பட்ட படிவங்கள் மீது உரிய ஆணை பிறப்பிக்கபட்டு துணைப் பட்டியல்களில் பெயர்கள் சேர்க்கப்பட்ட வாக்காளர்களது எண்ணிக்கை 68,823 அதன் விவரம் கீழ்வருமாறு

1. ஆண்கள்32,662 2. பெண்கள் 36,111, 3. இதரர்50, மொத்தம் 68,823.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்களது கள ஆய்வின் போது கண்டறியப்பட்ட இடம் பெயர்ந்தோர், காலமானோர் மற்றும் வாக்காளர் பட்டியல்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பதிவுகளில் இடம் பெற்றோர் மற்றும் வாக்காளர் பட்டியல்களில் பெயர் நீக்கம் செய்ய கோரி வரப்பெற்ற படிவம்-7ன் எண்ணிக்கை 49,482 ஆகும். அவற்றில் வாக்காளர் பதிவு அலுவலர்களது விசாரணைக்கு பின்னர் வாக்காளர் பட்டியல்களிலிருந்து பெயர்கள் நீக்கம் செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை 35,834 ஆகும். மேலும், எந்த பெயர்களும் தகுதியின்மை அடிப்படையில் தன்னிச்சையாக (SUO-MOTU) நீக்கம் செய்யப்படவில்லை.

மேலும், இவ்வாறு அனைத்து தொகுதிகளிலும் உள்ள வாக்காளர் பட்டியலிலிருந்து உரிய நடைமுறையை பின்பற்றி இறந்து போன, நிரந்தரமாக குடிபெயர்ந்தவர்கள் மற்றும் பலமுறை பட்டியலில் பதிவுகள் (REPEATED) ஆகிய பெயர்கள் தொடர் திருத்தம் மற்றும் சிறப்பு சுருக்கத் திருத்த காலங்களில் நீக்கம் செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை விவரங்கள்

1. ஆண்கள் 17,399, 2. பெண்கள்18,423, 3. இதரர் 12. மொத்தம் 35,834

மேற்குறிப்பிட்ட 35,834 நீக்கம் செய்யப்பட்ட பெயர்களில், 469 இறந்தவர்கள், 25,291 நிரந்தரமாக குடிப்பெயர்ந்தவர்கள் மற்றும் 10,074 பலமுறை பட்டியலில் பதிவு (REPEATED).

தற்போது வெளியிடப்பட்டுள்ள இறுதி திருத்தப் பட்டியலில் வாக்காளர்களது எண்ணிக்கை, கடந்த 27.10.2023 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களது எண்ணிக்கையினை விட 32,989 அதிகம் என்றும், இந்த எண்ணிக்கை வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களை விட 0.85 சதவீதம் அதிகம் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இந்த சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தில் பெயர்கள் சேர்க்கப்பட்ட வாக்காளர்களில் சிறப்பு சுருக்கத் திருத்தம் 2023 முதல் 18 வயது பூர்த்தியடைந்தவர்கள் எண்ணிக்கை 37,442 .

வாக்காளர் எண்ணிக்கை குறைந்தபட்சமாக எண் 18. துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் 1,72,624 வாக்காளர்களும், அதிகபட்சமாக எண்.26. வேளச்சேரி சட்டமன்றத் தொகுதியில் 3,08,462 வாக்காளர்களும் உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) சி.சுரேஷ் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.